1990 மார்ச் 23]

துவரை நியமிப்பதற்கான கருத்துரு துறையிலிருந்து வருமானால், அதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திண்டிவனம் நகருக்கு கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***2297 டாக்டர் சி. ரா. மாசிலாமணி :**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :—

திண்டிவனம் நகருக்கு குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்க தென் பெண்ணையாறு கூட்டுக் குடிநீர்த் திட்டம் இவ்வாண்டு தொடங்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

இல்லை.

[10-05 மணி)

டாக்டர் சி. ரா. மாசிலாமணி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் நகருக்குப் போடப்பட்டு இருந்த அந்த புளிச்சம்பள்ளி குடிநீர்த்திட்டம் எப்போது முடிவுறும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் கேட்டிருந்த கேள்வி, தென்பெண்ணையாற்றிலிருந்து திண்டிவனத்திற்கு குடிநீர் கொண்டு வருகிற திட்டம் இருக்கிறதா என்பது. அதற்கான பதிலை, இல்லை என்று அறிவித்து இருந்தேன். இருந்தாலும், இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிற புளிச்சம்பள்ளி திட்டத்தை நிறைவேற்றுவதற்கான பணிகள் வேகமாக செயல்பட்டுக் கொண்டு வருவதை உறுப்பினர் அவர்களே நன்றாக அறிவார்கள். எந்த அளவிற்கு விரைவாக செயல்படுத்த முடியுமோ, அதற்கான ஏற்பாடுகளை இந்த அரசு செய்து வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

டாக்டர் சி. ரா. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டிவனம் நகரில் வாடிக்கையாக ஏற்படும் குடிநீர்த் தட்டுப்பாடு இந்த வருடம் சற்றுமுன்னதாகவே ஆரம்பித்து இருக்கிறது. இப்போது 3 நாட்களுக்கு ஒரு முறை தான் அங்கே குடிநீர் வழங்கப்படுகிறது. அதுவும் ஒரு குறிப்பிட்ட பகுதிக்குத்தான் தண்ணீர் கிடைக்கிறது. எனவே சென்ற ஆண்டு லாரிகள் மூலமாக தண்ணீர் வழங்கியதைப் போல, இந்த ஆண்டும் வழங்குவதற்கு அரசு நிதிநிலையை அளிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, இதுபோன்ற பிரச்சினைகள் வருகிறபோது, அதை இந்த அரசு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால், உறுப்பினரால் அவ்வுரை சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(10-05 மணி)

2. தகவல் கோரல்.

(அ) அமைச்சர் பதவியை விட்டு விலகிய திரு. ஆற்காடு நா. வீராசாமி அவர்கள் அவைக்கு விளக்கம் அளிக்க வேண்டியது குறித்து.

திரு. குமரி அனந்தன் ; மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, சட்டமன்ற விதி 73-ன் படி இந்த அவைக்கு சில தகவல்களைப் பெறுகின்ற உரிமை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் ஆற்காடு வீராசாமி அவர்கள் இங்கே அமைச்சராக இப்போது இல்லை. அவர்கள் பதவியை ராஜிநாமா செய்திருக்கிறார்கள். எனவே, ராஜினாமா செய்ததற்கு உரிய காரணத்தை இந்த அவையிலே வந்து சொல்ல வேண்டும் என்றும், இந்த அவையிலே வந்து சொல்வார் என்று நாங்கள் ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்து, சொல்லாத காரணத்தாலே, இந்த விதிமுறையிலே மறுநாள் சொல்வதாக இருந்தால், இன்று சபாநாயகருக்கும், அவை முன்னவருக்கும் ஒரு விளக்க அறிக்கையை அவர் தந்திருப்பார், தர வேண்டும் என்று இருக்கின்ற காரணத்தாலே, விளக்க அறிக்கை இருக்கிறதா, நாளைக்காவது அவர் சொல்ல இருக்கிறாரா? ஏனென்றால் 'may' என்று சொல்கிற அந்த சொல்லை, இங்கே எனக்கு எடுத்துச் சுட்டிக் காட்டினார்கள். 'May' he may என்று சொல்கிற அந்தச் சொல் இருக்கிற காரணத்தாலே, அவர் சொன்னாலும் சொல்லலாம், சொல்லாமலும் இருக்கலாம் என்று சொல்கிற ஒரு வாதத்திற்குள் போய் விடக்கூடாது என்பதற்காகச் சொல்கிறேன். ஏன் என்றால், இதில், 'Law Lexicon—Page 800—'may' and 'shall' என்பதற்கு விளக்கம் கொடுக்கிறபோது, 'may' sometimes means 'shall' இன்னும் ஒரு விளக்கத்தைச் சொல்ல விரும்புகிறேன். when the word 'may' மீண்டும் சொல்கிறேன். the word 'may' though primarily permissive is in certain circumstances treated as mandatory. சில சந்தர்ப்பங்களிலே அது கட்டாயமாகச் சொல்ல வேண்டும் என்று சொல்கிற கருத்து அங்கே இருக்கிறது. அது Treated as mandatory. It should be treated as mandatory